இல்லாததால் மருந்தகம் தேவையில்லை. குளச்சல் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தமட்டில், மூன்று முதல் எட்டு கிலோமீட்டர் தூரத்தில் ஒரு கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருவதால் புதிய கால்நடை மருந்தகங்கள் அமைக்கத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 93, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.*

93—

புதிய பேருந்துகள்

***45—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் ஓடும் பெரும்பான்மையான அரசுப் பேருந்துகள் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பழுதடைந்துள்ள பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் விடப்படுமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டத்தில் 370 பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இதில் 22 பேருந்துகள் பழுதடைந்த பேருந்துகள். ஏற்கெனவே நீலகிரி மாவட்டத்தில் ஓடுகின்ற பேருந்துகள் அனைத்தும் சரியான முறையில் கடந்த கால ஆட்சியில் இயக்கப்படவில்லையென்ற குற்றச்சாட்டு பரவலாகவே இருக்கிறது. அவற்றையெல்லாம் சீரமைக்கின்ற வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா. கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டி, குன்னூர் பகுதிகளுக்கு தினமும் 10 ஆயிரம் பேர் சுற்றுலாப் பயணிகள் வருகின்றார்கள். பஸ்களிலே பயணம் செய்கின்றபோது பஸ்கள் ஆங்காங்கே நின்றுவிடுகின்றன. அடுத்த பஸ் வருவதற்கு ஏறத்தாழ அரை நாள் கூட ஆகிவிடுகிறது. தோட்டத் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்ல*

முடியாமல் போய்விடுகிறது. பள்ளி மாணவ மாணவிகள்கூடப் பள்ளிகளுக்குச் செல்ல முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. மாணவிகளின் சீருடைகள்கூட நனைந்துவிடுகின்றன. அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையிலே 1,550 புதிய பஸ்கள் வாங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதில் 200 பஸ்களை நீலகிரி மாவட்டத்திற்கு ஒதுக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் எங்கும் 20 போக்குவரத்துக் கழகங்கள் இருக்கின்றன. மொத்தமாக வாங்கப்படுகின்ற பேருந்துகள் 1,550. அதனுடைய விகிதாச்சாரத்தினுடைய அடிப்படையில், நீலகிரி மாவட்டத்திற்கு பேருந்துகள் ஒதுக்கித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச்.எம். ராஜு.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைக் கூறிக் கொள்கிறேன். மகாகவி பாரதியார் போக்குவரத்துக் கழகம் என்று நீலகிரி மாவட்டத்தில் ஆரம்பிக்கும்போது, மாண்புமிகு தலைவர் அவர்களே, 362 பேருந்துகள் இருந்தன. தமிழக அரசு போக்குவரத்துக் கழகம் அதை எடுக்கும்போது 362-ஐயும் கொடுத்தோம். இப்போது பார்த்தால் 300-க்கும் குறைவாகத்தான் பேருந்துகள் ஓடுகின்றன. அதன் காரணம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பல பேருந்துகள் ஓடுவதில்லை. புதிதாக வரும் பேருந்துகளுக்கு தமிழ்நாடு பொள்ளாச்சி இன்ஜினியரிங் கார்ப்பரேசனிலே body building செய்கிறார்கள். கோயம்புத்தூர் கோட்டத்திற்கு வரும்போது, எங்களுக்குக் கடந்த கால அரசில் பழைய பேருந்துகளுக்கு எல்லாம் வெறும் பெயின்ட்களை பூசிவிட்டு புதுப் பேருந்துகளை எல்லாம் தந்ததாகக் கூறியதை நாங்கள் அறிகிறோம். தயவு செய்து நீலகிரிக்கு வரும் பேருந்துகளை, பொள்ளாச்சியிலிருந்து நேராக எங்களுக்கு உதகமண்டலத்திற்குத் தரவேண்டும், குன்னூருக்குத் தரவேண்டும், கோத்தகிரிக்குத் தரவேண்டும், கூடலூருக்கும் தரவேண்டும். கோயம்புத்தூர் கோட்டத்திற்கு வராமல் நேராக நீலகிரிக்கு எங்களுக்குத் தர வேண்டுமென்ற உத்தரவாதத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2001 செப்டம்பர் 14]

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூரிலிருந்து, கோயம்புத்தூர், மேட்டுப்பாளையம், ஈரோடு பகுதிகளுக்குப் போதுமான பஸ்கள் இல்லை. அதுவும் இரவு நேரத்தில் 10 மணிக்கு மேலே அங்கே பஸ்கள் ஓடுவதில்லை. போதுமான பஸ்கள் இல்லாத காரணத்தால், தனியார் மேக்சி வேன் சொந்தக்காரர்கள் குன்னூரிலிருந்து மேட்டுப்பாளையம் செல்வதற்கு நூறு ரூபாயும், கோயம்புத்தூர் செல்வதற்கு 150 ரூபாயும் வசூல் செய்கிறார்கள். எனவே, அரசுக்கு நிதிப் பற்றாக்குறை இருந்தால், மினி பஸ்களை விடுவதற்குக் கூடுதலாக பர்மிட் வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொன்னதுபோல, மேக்சி கேப் தமிழ்நாடு முழுவதும் இன்றையதினம் டிக்கெட் போட்டு அடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கை கோயம்புத்தூர் மாவட்டத்தில் எடுக்கப்பட்டு வருகிறது. வால்பாறை பகுதியிலேகூட, மேக்சி கேப் அதிகமாக அடிப்பதாக மாண்புமிகு கோவை தங்கம் அவர்கள் அன்றைக்கே அவையிலே குறிப்பிட்டார்கள். அதன் காரணமாக, நடவடிக்கை எடுத்ததன் பேரில், வால்பாறை கிளையில் மட்டும் நாள் ஒன்றுக்கு இருபதாயிரம் ரூபாய்க்கு மேல் இன்றையதினம் வசூல் அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட இரவு நேரப் பேருந்துகளுக்கு வசதி செய்ய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 94, திரு. பி.எஸ். உலகரட்சகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

94—

கூடுதல் பேருந்து

***3072—திரு. பி.எஸ். உலகரட்சகன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—